உ

சிவமயம்



யாழ் மாவட்டத்து

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்

கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும்

இளைப்பாறிய

சாமுவேல் சன்ஸ் கட்டிட மேற்பார்வையாளருமாகிய

திருவாளர்

## முருகுப்பிள்ளை விசுவலிங்கம்

அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்.

ஆக்கம்: பண்டிதர். க. முத்துவேலு ஆசிரியர்

திருவாளர்

# முருகுப்பிள்ளை விசுவலிங்கம்



தோற்றம்:
**23-1-1917**

மறைவு:
**13-08-1985**

உ

சிவமயம்



# நல்லைக் கந்தவேள் மீதான பதிகம்

## (கட்டளைக் கலித்துறை)

அருவும் உருவும் அருவுரு வான அறுமுகவன்
குருபர னாக அருளர சோச்சும் குமாரவேலன்
கருணா கரனாய்க் கலியுகத் தாட்செயும் கந்தமூர்த்தி
திருமலி தல்லைப் பதியினில் உள்ளனன் சேவியுமே.

செல்லப்ப யோகிக் கருளது தந்த திருமுருகன்
வல்வினை யாவும் வறிதே கலங்கிட வாழ்வருள்வோன்
சொல்லும் பொருளும் பிரபஞ்ச ரூப சொரூபனவன்
நல்லைப் பதியுளான் ஆங்கருள் பெற்றுய நாடுமினே.

திருவார் யமுனாரி தீர்த்தக் கரையிற் சிவகுமாரன்
வருவினை போக்குவன் வந்த வினைகளும் மாற்றுபவன்
கிருபா கரனவன் தேவசே னாபதிக் கீர்த்தியாளன்
முருகலர் சோலைசூழ் நல்லைப் பதியருள் மூர்த்தியாரே.

இச்சா, கிரியா, உயர்ஞான சக்தியாம் இன்னருளோன்
அச்சம் அகற்றும் அயிற்படை கொண்ட அழகனவன்
பச்சை மயிலினன் பண்டித னாய பரமகுரு
செச்சையாம் கண்ணியன் நல்லைப் பதியிற் சிவகுருவே.

சரவணப் பொய்கையிற் றோன்றி யருளிய சற்குருவாய்
அரனார்க் குபதேசம் செய்தவ ராண்ட அறுமுகவன்
பிரமனைக் குட்டிச் சிறையினில் வைத்த பிரானுமவன்
நிரந்தர நன்னகர் நல்லைப் பதியுளான் நீணினையே.

சூருடல் கீண்ட வடிவேற் கரத்தினன் சுப்ரமண்யன்
பாருயர் பண்டித னாக உவக்கும் பரமகுரு
ஏருறு மஞ்ஞை தனிலே எழுந்தருள் இன்னெழிலான்
ஆரும் அருளமு தார்ந்திட நல்லை அணுகுமினே.

குறவள்ளி, தெய்வானை காந்தனா யுள்ள குமரனவன்
இறவாது மீண்டும் பிறக்கா தருளும் இறைவனவன்
புறச்சமயம் காணாத போதப் பொருளாய பூரணனும்
அறம்வாழும் நல்லைப் பதியினி லுள்ளான் அடைமினீரே.

ஆறுபடை வீட்டினில் வீற்றிருந் தாளும் அருட்குமரன்
மாறுபடு சூர்க்கொன் றமர ரிடர்தீர்த்த வள்ளலவன்
ஏறுமயில் வாகனன் இன்தமிழ் தந்த இறைகுமாரன்
பேறுபல ஆண்டருள் நல்லைப் பதிவாழ் பெருமானாரே.

செந்தமிழ் தந்த அருட்குரு வான திருமுருகன்
சிந்தை குளிர்க்கும் குறிஞ்சிக் கிழவனும் சேந்தனவன்
அந்தமில் இன்ப நெறியது காட்டும் அருளரசாம்
நந்தலில் நல்வள நல்லைப் பதியுளான் நாடுமினே.

நக்கீரர்க் காத்தற்குப் பூதம் வதைத்திட்ட ஞானரூபன்
தக்க சமயத்தில் ஆண்டருள் செய்யும் தருமதேவன்
தொக்க பிறவித் துயர்களைந் தாள்பவன் சுப்ரமண்யன்
திக்கெலாம் போற்றிசெய் நல்லைப் பதியுளான் சேவியுமே.

திருவாளர்

# முருகுப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு.

(நேரிசை ஆசிரியப்பா)

இந்துமா சமுத்திரத் திலங்கும் முத்தெனச்
சந்ததம் புகழ்பெறு தகவுடை லங்கா
இலங்கை மாதாவின் இன்சிர சென்ன
நலன்கள் கொண்ட நன்னகர் யாழ்நகர்
அந்நகர் சார்ந்த ஆர்வள மிருபதி
மன்புகழ் சிறக்கும் வளமார் உடுநகர்
உடுவை வேளாண் உயர்சைவத் தோன்றல்
வேலுப் பிள்ளையென் மேதகு வாரெுன்.
அன்னார் தம்பால் அருந்தவத் தோன்றல்
முருகுப் பிள்ளையென் முழுநிறை வாரென்.
மன்புகழ் அவரின் வாழ்க்கைத் துணைவியாய்
சின்னத் தம்பியென் திருவுடை யார்மகள்
செல்லாச்சி என்னும் திருமகிழ் மாதென்.
அன்புடை அவர்பால் அருந்தவப் பேறுகள்
விசுவ லிங்கமென் மேம்படு புகழுறும்
அமர ருலகுற்ற அன்னம் மாவும்
செல்லம்மா என்னும் திருமகிழ் மாதும்
யோகம்மா என்னும் உளநலத் தாரும்
துரைசாமி யாய சுகுணவான் தாமும்
இராசம்சா என்னும் இன்குண வதியுமென்.
அன்னாரின் ஒன்றுவிட்ட அருமைச் சகோதரி
குணவதி யாய குலத்துயர் மாதென்.
விசுவ லிங்கமென் மேதகு பண்பினர்
சாமுவேல் அன்ட்சன்ஸ் தாபனம் தன்னிற்

கட்டட மேற்பார்வை யாள ராக
முப்ப தாண்டு முழுநிறை சேவையர்.
அன்னார் மகிழ்ந்த அருமனை நல்லார்
மகேஸ் வரியாய மாது சிரோமணி.
அன்னார் தம்பால் அருந்தவ மக்கள்
வரத ராணியென் மகிழ்ந்தரு வனிதையும்
வரத ராசாஎன் மனநிறை நம்பியும்
வில்வ ராணியென் மேதகு வனிதையும்
விமல ராணியென் மேலெழில் வனிதையும்
விஜய ராணியென் விரும்பு வனிதையென்
அன்னார் மகிழ்ந்த அருமை மருமகன்
சோமசுந் தரமென் சுகுண ஆசிரியர்க்குக்
குணவதி யாய குலதர்ம மாதுபால்
வந்து தோன்றிய மாண்புறு நம்பி
யோகேஸ் வரனென் யுவனார் தாமென்.
விசுவ லிங்கமாம் மேதகு புகழரின்
பேரர்ப் பிள்ளையாய்ப் பெருமகிழ் தந்தவர்
பிருந்தன் என்னும் பிள்ளை அமுதென்.
மேம்பட வாழ்ந்த விசுவ லிங்கம்
நல்லைக் கந்தவேள் நாடொறும் போற்றினர்.
பயன்மரம் உள்ளூரிற் பழுத்தற் றன்ன
நயன்சார் உதவிகள் நல்கிய மேலவர்
உற்றார், அயலவர், உறவினர் யாவர்க்கும்
பற்பல நன்றிகள் பாலித்த திருவினர்.
அமைதியும் சாந்தமு மாகவே வாழ்ந்து
இமையவர் இன்பம் இனிதிங்கு மகிழ்ந்தவர்,
இன்னின பண்பு இயைபுறக் கொண்டவர்
உற்றார், அயலவர், உறவினர் யாவரும்
கற்று இழந்த கன்றெனக் கதற
இம்மை தன்னை இகந்தே
பெம்மான் பதமலர் பெற்றனர் காணே.

உ
சிவமயம்

திருவாளர்
# முருகுப்பிள்ளை விசுவலிங்கம்
அவர்கள் மீதான
# கையறுநிலைப் பாக்கள்

## (திதி நிர்ணய வெண்பா)

ஆண்டு குரோதன ஆடியாம் மாதத்துக்
காண்பு துவாதசி காரபாம் — மாண்பார்
விசுவலிங்க மேலவர் மேதினி நீத்தே
பசுபதி தாள்சேர்பு பற்று.

## மனைவியார் பிரலாபம்
(கொச்சகம்)

வாழ்வீதில் உமையன்றி மறுதெய்வ மதித்தறியேன்
தாழ்வாயும் பணிசெய்தல் தருமமென மதித்திருந்தேன்
ஏழ்ஜென்மம் எடுத்தாலும் இனிவருமோ உமதுணையே
நீள்பயணம் புகுந்தனையோ? நிழலதுவாய் மறைந்தீரோ?

## ஹென்யா வாழ் புத்திரனர் பிரலாபம்

இறுகடன்கள் கழித்தற்கும் இறையெனக்கு வருக்கவில்லை
மறுவாழ்வு புகுந்திடற்கு மறைந்தனையோ எம்மிருந்தே
உறும்படியாய்க் குடும்பசுமை உறற்கென்னை விடுத்துவிட்டே
அறுந்ததுவோ பெரும்பாசம் அகன்றெம்மின் மறைந்தனையோ

## புத்திரியர் பிரலாபம்

கண்மணியாய் எமையெண்ணிக் கருத்துடனே வளர்த்த அப்பா
எண்ணியிரு சுகங்காணும் எமைப்பிரிந்து மறைந்தனையோ
மண்மிசையும் இறுகடன்கள் வகுப்பாரும் அருகிலில்லை
விண்ணுடு புகுந்திடற்கு மிகவிரைந்து மறைந்தனையோ.

## மருமகனுர் பிரலாபம்

கண்ணிலுமே விழிக்கவில்லே; கருத்தகடன் கழிக்கவில்லே
புண்ணியநின் அருகிருக்கப் பொறுக்கவில்லே அளப்பெமக்கே
உண்ணிறைந்த உமதன்பின் உருக்காண்பு மறைந்ததிங்கே
மண்மிசையெம் தொடர்பறுத்து மறுவாழ்வு புகுந்தனேயோ.

## சகோதரன், சகோதரியர் பிரலாபம்

பாசந்தான் அறுந்ததுவோ பரிவெம்மில் மறைவாச்சோ
நேசந்தான் நெகிழ்ந்ததுவோ நினைவெம்பால் மறைந்ததுவோ
ஆசறுதி வரும்வரைக்கும் அகத்தன்பை நினையவிட்டே
ஈசனுர் அளப்பொழிந்து எமைப்பிரிந்து மறைந்தனேயோ.

## ஒன்றுவிட்ட சகோதரியார் பிரலாபம்

அன்புடனும் உடன்பிறப்பாய் அகமகிழ்ந்து நினைந்திருந்தேன்
நின்நினைவாய் எமதுமகன் நினதுமகட் கமைத்த அண்ணு
என்னெனவாம் பொறுப்பதுவும் எமதுமகன் பொறுப்ப என்றே
நன்றுநினை வதுவாக நமைப்பிரிந்து மறைந்தனேயோ.

## மைத்துனர் பிரலாபம்

பண்பாகப் பழகுமுங்கள் பயில்வதனை நினைகிறமே
நண்பினனுய் எமை மகிழ்த்த நயமதனை மறப்பதுவோ
கண்ணிறைந்த உமதுருவைக் கணிக்காமேம் கலங்குகின்ருேம்
புண்ணியத்தின் ஒருபிறப்பே புகுந்தனேயோ மறுபிறப்பே.

## மைத்துனியர் பிரலாபம்

மதிப்பதனை நினைகிறமே; மரியாதை மறப்பதுமோ
எதிலெதிலும் உடன்பிறந்த இதயத்தை மகிழ்ந்திருந்தோம்
பதிந்துவிட்ட அகநினைவிற் பரிந்துருக எமைவிடுத்தீர்
விதித்திட்ட முடிவாக விரைந்தெம்மின் மறைந்தனேயோ

## பெருமக்கள் பிரலாபம்

பெற்றெடுத்த மகவுகளாய்ப் பிரியமாய் வளர்த்தவரே
பற்பலவாய் எமை மகிழ்த்த பரிவதனை மறவோமே
உற்ற எங்கள் பிதாவினன்பை உமதிடத்தில் மகிழ்ந்திருந்தோம்
மற்றெங்கள் தொடர்பறுத்து மறுஜென்மம் புகுந்தனேயோ.

## மருமக்கள் பிரலாபம்

நின்மகவாய் எமைநினைந்து நிறைவுசெய்த மறவோமே
அன்பதனை அகத்தாக்கி அருமையாய் மகிழ்த்தவரே
என்னெனவோ எமக்கான எலாமுமெமக் குவந்திருந்தோய்
மன்னுமிந்தத் தொடர்பறுத்து மறுவாழ்வு புகுந்தனையோ.

## பேரர்ப்பிள்ளை பிரலாபம

அன்புமுகம் இனிக்காணேன் அணைத்தவரே மறைந்தாயோ
இன்மொழிகள் எவரிடத்து இனிக்கேட்ப எனக்கிங்கே
என்னெனவாய் மகிழ்வித்தாய் எம்மிருந்து பிரிந்தனையோ.
பின்னெங்கு உமைக்காண்பேன் பிறவாழ்வு புகுந்தனையோ.

## உற்றார், உறவினர் பிரலாபம்

(விருத்தப்பா)

அன்புடனும் பண்புடனும் அனைவருடன் பழகியவ
அகன்று விட்டீர்
இன்முகமும் இன்சொல்லும் எவர்க்குமே யானவ
இன்று எங்கே,
என்றென்றும் நினைவுவரும் போதெல்லாம் எம்முள்ளம்
இரங்குதய்யா
நின்றனின் தொடர்பறுத்து எம்மிருந்து நீங்கினை
நிழலாய் விட்டீர்.

## தேற்றம

பிறந்தார் யாவரும் என்றோ எம்மிருந்து
பிரிதல் திண்ணம்
உறவாடு வாரெல்லாம் பயணவழிக் கூடிய
உறவே யாவர்
புறம்புறம் போவதும் வருவதும் சங்கெங்கள்
புனலுக் காமே
அறவழி நின்றே போமுயிர்க் காவண
ஆற்றல் நன்றே

# நன்றி நவிலல்

அன்புடையீர்!

எமது அருமைத் தந்தையாரின் ஈமக்கிரியாதிகளுக்கு வருகை தந்து ஆறுதல் மொழிபல கூறி எம்மைத் தேற்றியோர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
துக்கத்தில் அன்புள்ள மனைவியும்
யோ. வரதராணி,
வி. வரதராசா, வி. வில்வராணி,
வி. விமலராணி, வி. விஜயராணி.

அம்மன் கோவில் வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
12-09-1985